# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 18.08.2025**

**அசல் வழக்கு எண். 255/2013**

**வா.சா. 2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் ஏதும் வந்ததா என்றால் இல்லை. 1ம் வாதி அழைத்ததன்பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதியின் தந்தையான காவேரிகோனார் என்ற செல்லையாகோனார் மற்றும் எனது தந்தையான சிவனய்யா கோனார் ஆகியோர் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்களை யார் கூறினார்கள் என்றால் நான்தான் கூறினேன். இவ்வழக்கின் தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியாததால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்கள் நான் கூறியதன்பேரில் தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்களை என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். நான் எனது நிரூபண உறுதிக்கூற்றில் என்ன கூறியுள்ளேன் என்றால் வாதிகள் தாவா சொத்துக்களில் 3ல் 2 பங்கு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்ற விபரத்தை கூறியுள்ளேன். வேறு என்ன விபரங்களை நான் எனது நிரூபண உறுதிக்கூற்றில் கூறியுள்ளேன் என்றால் எனது பெரியப்பா காவேரிகோனார் வாங்கிய கடனை வேலம்மாள், அருணாச்சலம் மற்றும் முத்தாத்தாள் ஆகியோர் சேர்ந்து கட்டி முத்தாத்தாள் என்பவர் பெயரில் அதற்கான ரசீதை பெற்றனர் என்ற விபரமும், முத்தாத்தாள் இவ்வழக்கின் சொத்துக்களை 10 நபர்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டபின்பு விற்பனை செய்துள்ளார் என்ற விபரமும் கூறியுள்ளேன். இது தவிர்த்து வேறு விபரங்கள் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி முத்தாத்தாள் மற்றும் அவரது சகோதரிகள் எனது பெரியப்பாவின் கடனை திருப்பிக்கட்டும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. மேற்படி 3 பேரும்

சேர்ந்து எனது பெரியப்பா பெற்ற கடனை கட்டவில்லை என்றாலும்,எனது சகோதரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், முத்தாத்தாள் மட்டுமே எனது பெரியப்பாவின் கடனை கட்டினார் என்றாலும் சரியல்ல. அரசாங்கம் முத்தாத்தாள் பெயரில்தான் ஒப்படைப்பு பட்டா பிறப்பித்துள்ளது என்றால் சரிதான்.

2. காவேரிகோனாருக்கு தபசில் சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவின் பெயர் காவேரிகோனார் என்றால் சரிதான். மேற்படி காவேரிகோனாரின் மனைவி பெயர் கோட்டிமுத்து என்றால் சரிதான். வழக்கின் தபசில் சொத்துக்கள் கோட்டிமுத்துவிற்கு அவரது தாயாரிடமிருந்து பெறப்பட்டது என்றால் சரிதான்.

3. தபசில் சொத்துக்களில் 1ம் அயிட்ட சொத்தின் வடகிழக்கு மூலையில் கிணறு வெட்டவேண்டி காவேரிகோனார் அரசாங்கத்திடமிருந்து 1975ம் வருடம் கடன் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கிணறு வெட்டுவதற்கான கடனை திரும்ப செலுத்தாததால் 1ம் அயிட்ட தபசில் சொத்தை அரசாங்கம் கையகப்படுத்திக்கொண்டு அந்த சொத்தை அநாதீன சொத்தாக வகைப்பாடு செய்தது என்றால் சரிதான். மேற்கூறியவாறு 1ம் அயிட்ட தபசில் சொத்தை அரசாங்கம் கையகப்படுத்தியபிறகு முத்தாத்தாளுக்கு ஒப்படைப்பு பட்டா வழங்குவதற்கு முன்னர் வேறு நபருக்கு கட்டுக்குத்தகைக்கு விடப்பட்டது என்றால் சரியல்ல. வேறு நபருக்கு கட்டுக்குத்தகைக்கு விடப்படவில்லை. மேற்படி இடத்தில் முத்தாத்தாள்தான் பாடுபட்டு வந்தார்.

4. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவர் ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு 1993ம் வருடம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 72 சென்ட் இடத்தை கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தில் ஏர்டெல் டவர்கள் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஏர்டெல் டவர்கள் அமைப்பதற்கு வாடகைக்கு சிவனய்யாதான் கொடுத்தார் என்றால் வாடைக்கு கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும். வாடகைக்கு யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. வேலம்மாள் சகோதரி சிவனாத்தாள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார் என்றால் அவர் இறந்து சுமார் 30 வருடங்கள் இருக்கும்.

5. சிவனாத்தாள் என்பவருக்கு ராமச்சந்திரன் மற்றும் அருணாச்சலம் ஆகிய இரண்டு நபர்கள் பிள்ளைகள் என்றால் அருணாச்சலம் என்று ஒரு மகன்மட்டும்தான் சிவனாத்தாளுக்கு உண்டு. சிவனாத்தாளின் கணவர்பெயர் என்னவென்றால் அருணாச்சலம் ஆகும். மேற்படி சிவனாத்தாளின் கணவர் அருணாச்சலம் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி அருணாச்சலம் தற்போது கேரளாவில் உள்ளாரா என்றால் அவர் திருப்பூரில் உள்ளார். சிவனாத்தாளின் மகன் ராமச்சந்திரன் என்பவர் கேரளாவில் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரியல்ல.

6. 3ம் பிரதிவாதிக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர் என்றால் 3 பிள்ளைகள் உள்ளனர். வழக்கு தபசில் சொத்துக்களில் எத்தனை நபர்கள் வீடு கட்டியுள்ளனர் என்றால் சுமார் 6 நபர்கள் வீடு கட்டியுள்ளனர். மேற்கூறிய 6 நபர்களும் தாவா சொத்துக்களில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வீடுகள் கட்டினர் என்றால் சரிதான். மேற்கூறிய 6 நபர்களும் வீடு கட்டும் சமயத்தில் வாதிகள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

7. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் பூலுடையார் என்ற துரை என்றால் சரிதான். மேற்படி பூலுடையார் என்ற துரையின் சகோதரர்கள்தான் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவரான ராமகிருஷ்ணன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயரில் அரசாங்கத்தால் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டதால் தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதிதான் முழு உரிமையாளர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவரான பூலுடையார் என்ற துரைக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா காவேரிகோனாருக்கு பாத்தியப்பட்ட வேறு வீடுகள் மற்றும் நிலங்கள் எங்களது ஊரில் உள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பொறுத்து முத்தாத்தாள், சிவனாத்தாள் ஆகியோர் பாகப்பிரிவினை ஏதும் செய்துகொண்டனரா என்றால் எனக்கு தெரியாது.

8. பிராது தபசில்1ம் அயிட்ட சொத்தில் வீடு கட்டியுள்ள 6 நபர்களுள் 5நபர்களின் பெயர்கள் அரசப்பன், முத்துலட்சுமி, சண்முகத்தாய், சண்முகவடிவு மற்றும் 3ம் பிரதிவாதி மருதாத்தாள் என்றால் சரிதான். 6வது நபரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முத்தாத்தாள் கிரையம் கொடுத்த 10 நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அரசப்பன் வீட்டிற்கு வடக்குபுறத்தில்

காவேரிகோனார் வெட்டிய கிணறு உள்ளது என்றால் சிறிய கிணறு வெட்டப்பட்டது. அந்த கிணறு தற்போது மூடப்பட்டுள்ளது. அரசப்பன் வீட்டிற்கு வடக்குபுறத்தில் பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி உள்ளது என்றால் சரிதான்.

9. காவேரிகோனார் எங்களது ஊரின் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் அவர் பஞ்சாயத்துதலைவராக இருந்தது பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேன். காவேரிகோனார் பெற்ற கடனை முத்தாத்தாள் மற்றும் அவரது சகோதரிகள் சேர்ந்து கட்டியதாக இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி எனது சித்தப்பாவின் மகள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தாத்தாளின் மற்ற சகோதரிகள் சம்மதம் அளித்ததன் அடிப்படையில் அவருக்கு ஒப்படைப்பு பட்டா பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்து பொறுத்து வழங்கப்பட்டது என்று நான் கூறியுள்ள விபரம் பொய்யானது என்றால் சரியல்ல. பிராது தபசில் 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் காவேரிகோனார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**